செ.வெ.எண்-26 நாள்-14.04.2018

# அரியலூர் மாவட்டத்தில் பாரத ரத்னா டாக்டர்.பி.ஆர்.அம்பேத்கர் அவர்களின் 127-வது பிறந்தநாள் விழா.

அரியலூர் மாவட்ட ஆட்சியர் அலுவலகக் கூட்டரங்கில், மாவட்ட ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை மற்றும் ஊரக வளர்ச்சித்துறையின் சார்பில் **பாரத ரத்னா டாக்டர்.பி.ஆர்.அம்பேத்கர்** அவர்களின் 127-வது பிறந்தநாள் / சமூக நீதிநாள் முன்னிட்டு, பாரத ரத்னா டாக்டர்.பி.ஆர்.அம்பேத்கர் அவர்களின் திருவுருவ படத்திற்கு மாவட்ட ஆட்சித்தலைவர் **திருமதி.மு.விஜயலட்சுமி, இஆப.,** அவர்கள் தலைமையில், மாண்புமிகு அரசு தலைமைக்கொறடா **திரு.தாமரை.எஸ்.இராஜேந்திரன்** அவர்கள் மலர் தூவி, மரியாதை செலுத்தி, ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை அலுவலர்கள் மற்றும் விடுதி காப்பாளர்கள், பணியாளர்களின் விழிப்புணர்வு பேரணியினை கொடியசைத்து துவக்கி வைத்தார்கள்.

இந்நிகழ்ச்சியில், ஜெயங்கொண்டம் சட்டமன்ற உறுப்பினர் **திரு.ஜெ.கே.என்.இராமஜெயலிங்கம்** அவர்கள் முன்னிலை வகித்தார்கள்.

மேலும், அரியலூர் மாவட்டத்தில் பாரத ரத்னா டாக்டர்.பி.ஆர்.அம்பேத்கர் அவர்களின் 127-வது பிறந்த தினத்தை முன்னிட்டு 14.04.2018 முதல் 05.05.2018 வரை கிராம சுயராஜ் இயக்கம், கிராம சுயாட்சி பிரச்சாரம் சார்பில் பொதுமக்கள் அறிந்துகொள்ளும் வகையில் பல்வேறு வகையான விழிப்புணர்வு நிகழ்ச்சிகள் நடத்திட மத்திய அரசால் அறிவுறுத்தப்பட்டுள்ளது.

இதன் ஒரு பகுதியாக இன்று (14.04.2018) துவக்கி வைக்கப்பட்ட பேரணியில், அரியலூர் மாவட்டத்தில் உள்ள அனைத்து ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை அலுவலர்கள் மற்றும் விடுதி காப்பாளர்கள், பணியாளர்கள் மூலம் மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகத்திலிருந்து வாழ்க வாழ்க வாழியவே! டாக்டர் அம்பேத்கர் புகழ் வாழியவே!, தழைக்க வேண்டும்! தழைக்க வேண்டும்! சமூக நீதி தழைக்க வேண்டும்!, மலரட்டும் மலரட்டும்! மனிதநேயம் மலரட்டும்!, விலகட்டும் விலகட்டும்! வேற்றுமைகள் விலகட்டும்! போன்ற வாசகங்களின் உறுதிமொழியினை வாசித்துக்கொண்டு அரியலூர் பேருந்து நிலையத்தில் உள்ள பாரத ரத்னா டாக்டர்.பி.ஆர்.அம்பேத்கர் அவர்களின் திருவுருவ சிலைக்கு மாலை அணிவித்து, மரியாதை செலுத்தினார்கள்.

இந்நிகழ்ச்சியில், மாவட்ட வருவாய் அலுவலர் சே.தனசேகரன், திட்ட இயக்குநர் ஊரக வளர்ச்சி முகமை ஜி.கே.லோகேஷ்வரி, மாவட்ட ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நல அலுவலர் க.இளங்கோ, தனி வட்டாட்சியர்கள் (ஆதிதிராவிடர் நலன்) கலைவாணன், தேன்மொழி மற்றும் அலுவலர்கள், பணியாளர்கள் கலந்துகொண்டனர்.

**செய்தி வெளியீடு:- செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், அரியலூர்.**